செ.வெ.எண்-40 நாள்-18.12.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம், தா.பழூர் மற்றும் ஆண்டிமடம் ஒன்றியங்களுக்குட்பட்ட வாக்கு எண்ணும் மையங்களை தேர்தல் பார்வையாளர் **திரு.த.சு.ராஜசேகர், இஆப.,** அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, தேர்தல் பார்வையாளர் அவர்கள் தெரிவித்ததாவது,**

உள்ளாட்சி தேர்தல் அரியலூர் மாவட்டத்தில் **12** மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பதவியிடங்களுக்கும், **113** ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும், **201** கிராம ஊராட்சி தலைவர் பதவியிடங்களுக்கும், **1662** கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கு **27.12.2019** மற்றும் **30.12.2019** தேர்தல் இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது. இத்தேர்தலில் மொத்தம் **5** இலட்சத்து **36** ஆயிரத்து **976** வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

ஜெயங்கொண்டம், தா.பழூர் மற்றும் ஆண்டிமடம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்க இரண்டாம் கட்டமாக **30.12.2019** அன்று **495** வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வாக்கு எண்ணும் மையமான ஜெயங்கொண்டம் அரசு மேல்நிலைப்பள்ளியிலும், தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு வாக்கு எண்ணும் மையமான தா.பழூர் அரசு மேல்நிலைப்பள்ளியிலும், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வாக்கு எண்ணும் மையமான விளந்தை அரசு மேல்நிலைப்பள்ளியிலும் வாக்கு எண்ணிக்கை **02.01.2020** அன்று நடைபெறவுள்ளது.

மேலும், மேஜைகள் அமைத்தல் மற்றும் தடுப்புகள் அமைத்தல், மழைநீர் புகாத வண்ணம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யும் பணிகளை பொறியாளர்கள் மேற்பார்வையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 24 மணி நேரமும் கண்காணிப்பு கேமராக்கள் பொறுத்தப்பட்டு வாக்கு எண்ணும் மையங்கள் கண்காணிக்கப்படும். பேரிகேட் அமைத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவும், வேட்பாளர்களின் முகவர்கள் வரும் வழி அமைத்தல், வாக்கு எண்ணிக்கையை உடனுக்குடன் ஒலிபெருக்கி மூலம் தெரியப்படுத்துதல் செய்வதற்கான பணிகள் செய்ய வேண்டும் என தேர்தல் பார்வையாளர் **திரு.த.சு.ராஜசேகர், இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காவல்துறையினர், வளர்ச்சி, வருவாய்த்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**